Puducherry / Tamil

18.10 hrs 23.1.2026

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 23.1.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டுவதில், தமிழகத்திற்கு முக்கிய பங்கு இருப்பதாக, **மதுராந்தகம் பொதுக் கூட்டத்தில்**, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**முன்னதாக திருவனந்தபுரத்தில்**, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரிப்பதே, **ஜனநாயகத்தின் அஸ்திவாரம்** என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 3 திரவ இருமல் மருந்துகளின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு, தடை விதிக்கப் பட்டுள்ளது.

முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டுவதில், தமிழகத்திற்கு முக்கிய பங்கு இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று மதுராந்தகத்தில், தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்களுடன் இணைந்து, பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், தமிழகம் எவ்வளவு விரைந்து முன்னேறுகிறதோ, அந்த அளவு விரைவாக நாடு முன்னேறும் என்றார். திமுக வின் மோசமான ஆட்சியில் இருந்து விடுபட, தமிழக மக்கள் தயாராகி விட்டார்கள் என்பதையே, இன்றையக் கூட்டம் எடுத்துக் காட்டுவதாகவும், முன்னேறிய, பாதுகாப்பான, ஊழலற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி, மாநிலத்தில் அமையும் என்றும், அவர் கூறினார். கடந்த 11 ஆண்டுகளில் தமது அரசு, வரிப் பகிர்வு மூலமாக மட்டும், தமிழகத்திற்கு, 3 லட்சம் கோடி ரூபாய் நிதி வழங்கி இருப்பதாகவும், இது, முந்தைய காங்கிரஸ் – திமுக ஆட்சிக் காலத்தில் வழங்கப் பட்டதை விட, 3 மடங்கு அதிகம் என்றும், பிரதமர் தெரிவித்தார். மக்கள் நலப் பணிகளுக்காக, தமது அரசு தமிழகத்திற்கு 11 லட்சம் கோடி ரூபாய் வழங்கி இருப்பதாகவும், அவர் கூறினார். ரயில்வே பட்ஜெட்டிலும், தமிழகத்திற்கு 7 மடங்கு அதிக நிதி வழங்கப் படுவதாக அவர் தெரிவித்தார். தமிழக மக்கள் திமுக-விற்கு, 2 முறை தெளிவான ஆட்சி அதிகாரம் வழங்கிய போதிலும், மக்களின் நம்பிக்கையை திமுக காப்பாற்றவில்லை என்றும், திமுக வாக்குறுதிகளை அள்ளி வழங்கியதே தவிர, திமுக அரசின்

***மோடி – தமிழ்நாடு -2 (8)***

பணிகள், பூஜ்யம் என்றும், அவர் குறிப்பிட்டார். குடும்ப அரசியல், ஊழல், பெண்களை வசைபாடுதல் மற்றும் கலாச்சாரத்தை பழிக்கும் கட்சி திமுக என்றும், சங்க காலத்தில் இருந்தே, நாட்டின் கலாச்சாரத்தை வலுப்படுத்தி வரும், தமிழ்ப் பண்பாட்டை, போற்றி பாதுகாப்பது, பிஜேபி-தான் என்றும் அவர் கூறினார். அஇஅதிமுக பொதுச் செயலர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, அமமுக தலைவர் திரு. டி.டி.வி. தினகரன், முன்னாள் மத்திய அமைச்சர்கள் டாக்டர் அன்புமணி ராமதாஸ், ஜி.கே. வாசன், மற்றும், திரு. பாரி வேந்தர், திரு. ஏ.சி. சண்முகம் உள்ளிட்டோர், பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

***மோடி கேர□ா -1 (3)***

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று திருவனந்தபுரத்தில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

**(வாய்ஸ்)**

(வாய்ஸ்)

திருவனந்தபுரத்தில், திருவனந்தபுரம் – தாம்பரம் அமிர்தபாரத் எக்ஸ்பிரஸ் ரயில் உட்பட, 3 அமிர்த பாரத் ரயில்களையும், பயணிகள் ரயில் ஒன்றையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கொடியசைத்து தொடக்கி வைத்தார். ஸ்வாநிதி கடன் அட்டைகளை அவர் வெளியிட்டு, கேரளத்தைச் சேர்ந்த சுமார் 1 லட்சம் சாலையோர வியாபாரிகளுக்கு ஸ்வாநிதி கடன்களை வழங்கினார். இந்திய அறிவியல் – தொழில் ஆராய்ச்சிக் கழகமும், பல்துறை அறிவியல் – தொழில் நுட்பங்களுக்கான இந்தியக் கழகமும் இணைந்து அமைக்க உள்ள, புதுமையாக்க மற்றும் தொழில்முனைவு மையத்திற்கு, பிரதமர் அடிக்கல் நாட்டினார். திருவனந்தபுரம் சித்திரைத் திருநாள் மருத்துவக் கல்லூரியில், அதி நவீன கதிரியக்க அறுவைச் சிகிச்சை மையம் அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப் பட்டது. தொடர்ந்து, விழாவில் அவர் பேசுகையில், முன்னேறிய இந்தியா என்னும் இலக்குடன், நாடே பாடுபட்டு வரும் நிலையில், இந்த இலக்கை எட்டுவதில், நகரங்களுக்கு முக்கியப் பங்கு இருப்பதாகக் கூறினார். கடந்த 11 ஆண்டுகளாகத் தமது அரசு, நகர்ப்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளில், பெருமளவில் முதலீடு செய்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இன்று, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள், பராக்கிரம தினமாக கொண்டாடப் படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேதாஜிக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். அபார துணிச்சல் மற்றும் மன உறுதியுடன், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், நாட்டிற்கு ஆற்றிய இணையற்ற சேவைகளை, நாடு இன்றைய தினம், நினைவு கூர்வதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். அச்சமற்ற தலைமை மற்றும் அசையாத நாட்டுப் பற்றின் வடிவமாகவே திகழ்ந்தவர் நேதாஜி என்றும், அன்னாரின் லட்சியங்கள், வலுவான இந்தியா ஒன்றை உருவாக்குவதில், பல தலைமுறைகளுக்கு உணர்வூக்கம் அளித்து வருவதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, உள்ளிட்ட தலைவர்களும் நேதாஜிக்கு புகழாரம் சூட்டி உள்ளனர். குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று, ஒடிஷா மாநிலம் புவனேஷ்வரில், பராக்கிரம தின விழாவில் கலந்து கொண்டார். கட்டாக்கில், நேதாஜி பிறந்த இடமான ஜானகிநாத் பவனில், அன்னாரின் சிலைக்கு, அவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அங்குள்ள நேதாஜி அருங்காட்சியகத்தை குடியரசு துணைத் தலைவர் பார்வையிட்டு, நேதாஜி சம்ஸ்கிருதி பவன் கட்டிடத்தை திறந்து வைத்தார். நேதாஜி பிறந்த நாளை ஒட்டி, கொல்கத்தாவில் இன்று மாலை நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியிலும், குடியரசு துணைத் தலைவர் கலந்து கொள்கிறார்.

***ஒத்திகை (7)***

குடியரசு தின அணிவகுப்பின் முழு உடை ஒத்திகை, தலைநகர் டெல்லியின் **கர்த்தவ்ய பாதையில்** இன்று நடைபெற்றது. நாட்டின் செழுமையான பாரம்பரியம், ராணுவ வல்லமை மற்றும் கலாச்சார பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில், இந்த ஒத்திகை அமைந்து இருந்தது. ஆயுதப் படைகளின் பல்வேறு அணி வகுப்புக் குழுக்களும், மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும், நாட்டின் பலத்தையும், பண்பாட்டு ஒருமைப்பாட்டையும் எடுத்துக் காட்டின.

***தேர்தல் ஆணையம் (18)***

தகுதி உள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் அடங்கிய முற்றிலும் பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரிப்பதே, ஜனநாயகத்தின் அஸ்திவாரம் என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், **ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை** குறித்த **இந்திய சர்வதேச மாநாட்டின் நிறைவு நாள் அமர்வில்** உரையாற்றிய அவர், தேர்தல் நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க, **தேர்தல் நிர்வாக அமைப்புகள்**, அனைத்து வாக்காளர்களுக்கும், **புகைப்பட அடையாள அட்டை** வழங்க வேண்டும் என்றார். மாநாட்டின் 3 நாள் அமர்வுகளில் வெளியான கருத்துக்கள் **5 பிரிவுகளாக** தொகுக்கப் பட்டுள்ளதாகவும், புதுமையாக்கம்,

**பரஸ்பர ஒத்துழைப்பு** மற்றும் வருடாந்திர **மறுஆய்வு** அடிப்படையில், இந்த எல்லாப் பிரிவுகளையும், முழுமையாக அமல்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

மாநாட்டின் அலுவல்களுக்கு இடையே, பல்வேறு நாடுகளின் **தேர்தல் நிர்வாக அமைப்புக்களுடன்** இருதரப்பு கூட்டங்களையும் திரு. கியானேஷ் குமார் நடத்தினார். தேர்தல் நடைமுறைகளுக்கான இந்தியாவின் **ஈசி-நெட்** தொழில்நுட்பத்தை, அந்தந்த நாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப, இதர **தேர்தல் மேலாண்மை அமைப்புகளுடன்** பகிர்ந்து கொள்ளவும், **தேர்தல் ஆணையம்** முன் வந்துள்ளது.

***பிரகதி-1 (8)***

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட **பிரகதி** டிஜிட்டல் வசதி, **உயர்நிலைத் தலையீடு** மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. **பிரகதி மறுஆய்வு** மூலம் திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட முக்கிய திட்டங்களில் ஒன்றான, Jaipur-Sikar-Churu அகல ரயில்பாதை திட்டம் குறித்து, ஒரு தொகுப்பு……

**(வாய்ஸ்)**

(வாய்ஸ்)

ராஜஸ்தானில், Jaipur-Sikar-Churu இடையிலான 320 கிமீ மீட்டர் கேஜ் ரயில் பாதையை, ஆயிரத்து 222 கோடி ரூபாய் மதிப்பில், அகலப் பாதையாக மாற்றும் பணிகள், ரயில்வே அமைச்சகத்தின் நிர்வாக மேற்பார்வையின் கீழ், வடமேற்கு மண்டல ரயில்வே நிர்வாகத்தால் மேற்கொள்ளப் பட்டன. கட்டம்-கட்டமான முறையில் பணிகள் நிறைவேற்றப் பட்டு, பூர்த்தி அடைந்த எல்லா அகலப் பாதை பிரிவுகளும், கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதி, தேசிய அளவிலான அகல ரயில்பாதை கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப் பட்டன. திட்டம் அமலாக்க நிலையில் இருந்தபோது, நில ஆர்ஜிதப் பணிகள் மற்றும் சுற்றுச் சூழல் அனுமதி பெறுவதில், பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டதால், முன்னேற்றம் தடை பட்டது. பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் தேதி, பிரகதி வசதி மூலம், திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்து, துரிதமான முறையில் தீர்க்குமாறு, ரயில்வே துறை, ராஜஸ்தான் அரசு மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகத்திற்கு உத்தரவிட்டார். தேவைப்பட்டால் இது தொடர்பாக மத்திய அமைச்சரவைச் செயலரை அணுகவும் அவர் அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்து, அமைச்சகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம், பிரச்சனைகள் தீர்க்கப் பட்டதால், திட்டம் தொடர்பான கட்டுமானப் பணிகள் சுமூகமான

முறையில் மேற்கொள்ளப் பட்டு, நிறைவேற்றி முடிக்கப் பட்டன. Jaipur-Sikar-Churu அகலப் பாதை திட்டத்தினால், ராஜஸ்தானில், பிராந்திய அளவிலான போக்குவரத்து இணைப்புகள் கணிசமாக மேம்பட்டு உள்ளதும், உயர் நிலை மறு ஆய்வு மூலமான திட்ட அமலாக்கம் என்பதற்கு, முக்கிய எடுத்துக் காட்டாக, இத்திட்டம் திகழ்வதும், குறிப்பிடத் தக்கது.

***புதுச்சேரி இருமல் மருந்து (13)***

அகமதாபாத்தில் உள்ள **ரெட்நெக்ஸ்** நிறுவனத்தால் தயாரிக்கப்படும் RespiFresh திரவ இருமல் மருந்தை, புதுச்சேரியில் விற்க மாநில அரசின் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை தடை விதித்துள்ளது. அகமதாபாத்தில் உள்ள Edkem நிறுவனத்தால் தயாரிக்கப்படும் RespiFresh-TR திரவ மருந்து மற்றும் ஹரித்துவார் பகுதியில் உள்ள **இண்டியன் டிரக்விஷன்** நிறுவனத்தின் தயாரிப்பான Medikof – D திரவ மருந்துக்கும், புதுச்சேரியில் தடை விதிக்கப் பட்டுள்ளது. மருந்து விற்பனையாளர்கள் இந்த மருந்துகளின் நடப்பு கையிருப்புக் குறித்த விவரங்களை, மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையிடம் தெரிவித்து, மருந்துகளை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது. இம்மருந்துகள், உரிய தரத்தில் இல்லை என ஜார்க்கண்ட் அரசின் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையிடம் இருந்து தகவல்

பெறப்பட்டதைத் தொடர்ந்து, புதுச்சேரியில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

***புதுச்சேரி சோதனை (8)***

குடியரசு தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில், அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில், போலீசார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக இன்று புதுச்சேரி ரயில் நிலையத்தில், கிழக்குப் பகுதி காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஸ்ருதி யாரகட்டி தலைமையில், வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்களின் உதவியுடன் தீவிர சோதனை மேற்கொள்ளப் பட்டது. பயணிகளும் முழுமையான சோதனைகளுக்குப் பின்னரே அனுப்பி வைக்கப் பட்டனர். பேருந்து நிலையங்களிலும், இதேபோல தீவிர சோதனை மேற்கொள்ளப் பட்டது.

***ஆரோவில் (13)***

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணைச்செயலர் திரு. ரவிசங்கர், துறை இயக்குநர் திருமதி. **விபா சேகல்** உள்ளிட்டோர் அடங்கிய உயர்நிலை மத்திய குழுவினர், இன்று ஆரோவில்லுக்கு வருகை புரிந்து, அதன் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். ஸ்ரீஅரவிந்தர் மற்றும் அன்னையின் **ஆன்மீகத் தொலைநோக்கு** மற்றும் ஆரோவில் சர்வதேச நகரத்தின் **முதன்மைத் திட்டம்** குறித்து, விரிவான ஆலோசனை

மேற்கொள்ளப் பட்டது. ஆரோவில் பள்ளிகளில் பின்பற்றப்படும், **ஒருங்கிணைந்த கல்வி முறை** குறித்தும், இவர்கள் கேட்டறிந்தனர். தொடர்ந்து CBDC என்னும் **மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம்** குறித்து, இணைய வழியில் இக்குழுவினர், நடத்திய ஆலோசனைகளில், ஆரோவில் அறக்கட்டளையின் செயலர் டாக்டர் ஜெயந்தி ரவி, மெய்நிகர் முறையில் கலந்து கொண்டார். ஆரோவில்லின் தனித்துவமான பொருளாதாரத்தை மேம்படுத்த, உள்ளூர் **டிஜிட்டல் நிதி முறை** ஒன்றை உருவாக்க திட்டம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

***வானிலை (7)***

இன்று, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம், கடலூர், விழுப்புரம், சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரியில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 26ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

***கிரிக்கெட் (4)***

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான, 2ஆவது 20 ஓவர் போட்டி, **நியூ ராய்ப்பூரில்**, இன்று மாலை

நடைபெற உள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில், இந்தியா தற்போது, **1க்கு-பூஜ்யம்** என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டுவதில், தமிழகத்திற்கு முக்கிய பங்கு இருப்பதாக, **மதுராந்தகம் பொதுக் கூட்டத்தில்**, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**முன்னதாக திருவனந்தபுரத்தில்**, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை, பிரதமர் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரிப்பதே, **ஜனநாயகத்தின் அஸ்திவாரம்** என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 3 **திரவ இருமல் மருந்து**களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு, தடை விதிக்கப் பட்டுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK**